**சுற்றுச்சூழல் துறை இயக்குநர் அவர்களின் புகையில்லா போகிப் பண்டிகையின் முக்கியத்துவம் பற்றி வலைதளம் மூலமாக பொதுமக்களுக்கும் மற்றும் மாணவ சமுதாயத்திற்கும் விடுக்கும் செய்தி**

**"போகி"** தமிழ் வருடத்தின் மார்கழி மாதத்தில் கடைசி நாளன்று, அதாவது தைத்திருநாளுக்கு முந்தைய நாளில் கொண்டாடப்படுகிறது. கிரிகோரியன் நாட்காட்டியின் படி வழக்கமாக இப்பண்டிகை ஜனவரி மாதத்தின் 13ஆம் நாளில் கொண்டாடப்படும். ஆனால் சில ஆண்டுகளில் ஜனவரி 14 ஆம் நாளிலும் கொண்டாடப்படுகிறது. ஆனால், மார்கழி மாதத்தின் இறுதி நாளையே போகிப் பண்டிகையாக தமிழ் நாட்டில் கொண்டாடப்படுகிறது.

இந்த நாள் "பழையன கழித்து, புதியன புகவிடும்" நாளாகக் கருதப்படுகிறது. பழையனவற்றையும், பயனற்றவைகளையும் விட்டெரியும் நாளாகக் கருதப்படுகிறது. பழந்துயர்களை அகற்றிப் போக்கும் இப்பண்டிகையைப் "போக்கி" என்றனர். அந்தச் சொல் நாளடைவில் மருவி "போகி" என்றாகிவிட்டது. அக்கால வழக்கப்படி மார்கழி கடைசிநாள் என்பதால், நடந்து முடிந்த நல் நிகழ்வுகளுக்கு நன்றி கூறும் நாள் போகி என்போரும் உண்டு.

வீட்டில் உள்ள பழைய மற்றும் தேவையில்லாத பொருட்களை புறக்கணித்து வீட்டில் புதியன வந்து புகுதல் வேண்டும் என்ற நம்பிக்கையில் மக்கள் போகிப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். அன்றைய நாள், வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள், தேவையற்ற பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டு வீடு சுத்தமாக்கப்படும்.

இவற்றோடு பழைய தீய பழக்கங்கள் மற்றும் உறவுகளிடம் ஏற்பட்ட மனக் கசப்புகள் போன்ற வேண்டத்தகாத எண்ணங்களையும் "ருத்ர கீதை ஞான யக்ஞம்" என அழைக்கப்படும் அக்னி குண்டத்தில் எறிந்து பொசுக்கி, வீட்டை மட்டுமல்ல மனதில் இருக்கும் தீய எண்ணங்களையும், தவறான எண்ணங்களையும் நீக்க வேண்டும் என்பது இதில் உள்ள தத்துவமாகும். பல்வேறு தெய்வீகக் குணங்களைத் தூண்டுவதன் மூலம் ஆன்மாவை உயர்தல், ஆன்மாவை தூய்மையாக்குதல் போன்ற செயல்பாடுகளை இப்பண்டிகை பிரதிபலிக்கிறது. மகர சங்கராந்தி எனப்படும் தைத்திருநாள் பண்டிகைக்கு முந்தைய நாளில் போகிப்பண்டிகை கொண்டாடப்படுகிறது.

முந்தைய காலத்தில் மாட்டுச் சாணம், மரக்கட்டைகள் மற்றும் விவசாயக் கழிவுகளை எறியூட்டினர். இதை ஏன் பின்பற்றினார்கள் என்றால் கடுமையான குளிரின் தாக்கத்தை சமாளிப்பதற்காகவே. நாளடைவில், பிளாஸ்டிக் மற்றும் இரப்பர் டயர்களை எரிப்பதை மக்கள்

பழக்கமாக்கிக் கொண்டனர். இதனால் காற்று மாசுபடுதல் ஏற்பட்டது. இதன் காரணமாக காற்றில் கார்பன் டை ஆக்சைடு மற்றும் விஷ வாயுக்களின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியது. இதனின் தாக்கமாக கண், மூக்கு, தொண்டை, தோல் மற்றும் சுவாசக் கோளாறுகள் ஏற்படஆரம்பித்தது. இதன் பொருட்டு மக்களுக்கு என்ன அறிவுறுத்தப்படுவது என்னவென்றால்

- இரப்பர் டயர்கள், பிளாஸ்டிக் மற்றும் பாலிதீன் பைகளை எரிக்க வேண்டாம்.
- தேவையற்ற கழிவுகளை முறையான வழியில் அப்புறப்படுத்த வேண்டும்.
- பிளாஸ்டிக், தேவையற்ற காகிதங்கள் மற்றும் இரப்பர் பொருட்களை மறு சுழற்சிக்கு உட்படுத்த வேண்டும்.
- மக்கும் கழிவுகளை உரமாக மாற்ற வேண்டும்
- டயர்கள், பழைய துணிகள் மற்றும் இதர கழிவுகளை எரிப்பதனால் காற்று மாசுபடுதல் மற்றும் ஓசோன் படலத்தில் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க வேண்டும்.

சுற்றுச்சூழல் துறையின் மூலமாக விழிப்புணர்வு பேரணிகள் மற்றும் கருத்தரங்குகள் தேசிய பசுமைப் படை மற்றும் சூழல் மன்றங்கள் வாயிலாக மக்களுக்கு புகையில்லா போகியை கொண்டாட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**“சுற்றுச்சூழலை காப்போம்! இயற்கையை காப்போம்! புகையில்லா போகியை கொண்டாடுவோம்”**

இயக்குநர்
சுற்றுச்சூழல் துறை